*பிரசங்கம் 13*

# இன்றைய நாட்களின் சபைக்குத் தேவனுடைய அறிவுறுத்தல்கள்

## (1 கொரிந்தியர் 16:1–24)

*1 கொரிந்தியர் 16ம் அதிகாரத்தில் கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்களுக்குப் பவுல் கொடுத்த அறிவுறுத்துதல்களை - மற்றவர்களைப் பற்றி அக்கறையாக இருத்தல், பலமுள்ளவர்களாகவும் அன்புள்ளவர்களாகவும் இருத்தல், தேவனுடைய ஊழியக்காரர்களைக் கனம்பண்ணுதல், எல்லாக் கிறிஸ்தவர்களையும் ஒன்றாகக் கட்டுகிற முடிச்சை உணர்ந்தறிந்து அதைப் பேணுதல் மற்றும் கர்த்தரை மிகமேன்மையாக அன்புகூருதல் ஆகியவற்றை - நாம் பின்பற்றுவது அவசியமாக உள்ளது. இருப்பினும், தேவனுடைய மக்களின் சபைக்குழுமம் ஒவ்வொன்றையும் தனக்கு அப்பால் கண்ணோக்கும்படிக்கு - புறம்பே கண்ணோக்கி, கர்த்தருடைய ஊழியத்தை இன்னும் சிறப்பாகச் செய்ய என்ன செய்யக்கூடும் என்பதைக் கண்ணோக்கும்படிக்கு - புத்திகூறும் பவுலின் வார்த்தைகளை அனுமதித்தல் என்பது மிகச்சிறப்பான நடைமுறைப் பயன்பாடாக இருக்கலாம்.*

*கொரிந்து சபைக்கு எழுதிய இந்த நிருபத்தை முடிக்கும் வேளையில் பவுலின் விருப்பநோக்கம் அதுவாகவே இருந்தது. அவர்களின் பிரச்சனைகளை, அவர் வெகுவிரிவாகக் கையாண்டார், சகோதரத்துவத்திற்கு அல்லது சபையின் உலகளாவிய ஊழியத்திற்கு அவர் ஒருசில குறிப்புகளை ஏற்படுத்தினார். நிருபத்தின் முடிவுப் பகுதியை அவர் அடைந்தவேளையில், தூரத்தில் இருந்த பரிசுத்தவான்களின் தேவைகளுக்கான உபகாரம் பற்றி, மற்ற இடங்களில் ஊழியம் செய்யும் பிரசங்கியார்கள் பற்றி மற்றும் எங்குமுள்ள எல்லாக் கிறிஸ்தவர்களையும் சகோதரத்துவத்தில் இணைக்கும் அன்பைப்பற்றி அவர் பேசினார். ஒருவேளை அவர், “உங்கள் பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் நாடுகிறவேளையில், கொரிந்து நகருக்கு அப்பால் உள்ள இடங்களில் இருக்கும் மற்றவர்களின் தேவைகளை நீங்கள் மறந்து விடாதீர்கள்!” என்று கூறியிருக்கலாம். “உங்கள் கண்களை ஏறெடுத்துப் பாருங்கள்! உலகத்தின் பலபகுதிகளில் சபை நிலவுகிறது! மற்ற இடங்களில் உள்ள மக்களுக்குத் தேவைகள் உள்ளன! ஒவ்வொரு நாட்டிலும் இழந்து போகப்பட்டவர்கள், இழந்து போகப்பட்டவர்களாகவே இருக்கின்றனர்!” என்பதே அவரது செய்தியாக இருந்தது.*

*மற்ற மக்களின் தேவைகளைக் குறித்து அவர்கள் அக்கறை கொள்ளும்படி*

கேட்டுக்கொண்டதில் பவுல், கொரிந்திய கிறிஸ்தவர்கள் தங்களின் பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதில் உதவினார். சுயமையம் கொண்ட மக்கள் சந்தோஷம் இல்லாது இருக்கச் சாத்திக்கூறு உள்ளது. மக்கள் மனச்சோர்வு அடைந்திருக்கும்போது, சிலவேளைகளில் அவர்களுக்கு, “உங்களைப் பற்றி அதிகமாக நினைப்பதை நிறுத்துங்கள்! [நீங்கள்] உதவிசெய்ய யாரையாவது கண்டறியுங்கள்” என்று கூறுதல் அவசியமாயிருக்கிறது. இந்த அறிவுரையை எடுத்துக் கொள்பவர்கள் அனேகமாக, தங்கள் சொந்தப் பிரச்சனைகள் மறைந்து போவதை அல்லது குறைந்து போவதைக் கண்டறிவார்கள். நம்மை மறத்தல் மற்றும் பிறருக்கு உதவுதல் ஆகியவற்றின் மூலமாக நாம், சந்தோஷத்தைக் கண்டறிய அதிக சாத்தியக்கூறு உள்ளது. கொரிந்து நகரில் இருந்த சபையார், அருகிலோ அல்லது தொலைவிலோ இருந்த மற்றவர்களை ஆசீர்வதிக்க அதிகமாகச் செய்வார்கள் என்றால், அவர்கள் தங்களுக்குப் பிரச்சனைகள் இருந்தாலும், அதிக ஆரோக்கியமானவர்களாகவும் அதிகம் வெற்றிபெறுபவர்களாகவும் இருக்கச் சாத்தியக்கூறு இருந்ததென்று பவுல் அறிந்திருந்தார்.

எனவே, 1 கொரிந்தியர் 16ல் இருந்து நாம், பின்வரும் செய்தியை அறிதல் அவசியமாக உள்ளது: ஒவ்வொரு சபையும் தனது உள்ளூர் சமூகத்திற்குப் புறம்பே கர்த்தருடைய ஊழியம் பற்றி அக்கறை கொள்வது அவசியமாகிறது!

## “சகோதரத்துவத்தை அன்புகூருங்கள்”

தனிநபரான ஒவ்வொரு கிறிஸ்தவரும் தமக்குதாமே வாழுதல் என்பது தேவனுடைய விருப்பமாக இருக்கவில்லை; பிறர்மீது அன்புகூரவும் நாம் அன்புகூரப்படவும் முடிவதான ஒரு சபைக்குழுமத்தில் நாம் ஒவ்வொருவரும் அங்கம் வகிக்க வேண்டும் என்றே அவர் விரும்புகிறார். நமது சகோதர சகோதரிகளை நாம் ஊக்குவிக்கக் கூடியதும் அவர்களால் நாம் ஊக்குவிக்கப்படக் கூடியதுமான சரீரத்தில் நாம் அங்கம் வகிக்க வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அவ்வாறே தேவன், கர்த்தருடைய சபையின் சபைக்குழுமம் ஒவ்வொன்றும் சுய ஆளுகை உடையதாக - தன்னாட்சி அமைப்பு உடையதாக - இருக்க வேண்டும் ஆனால் அது தனிமைப்பட்டதாக இருக்கக் கூடாது என்று திட்டமிட்டார். கர்த்தர் தமது சபையின் சபைக்குழுமம் ஒவ்வொன்றும், சகோதரத்துவத்தின் அங்கமாக இருப்பதை உணர்ந்தறிய வேண்டும் என்று விரும்புகிறார், மற்றும் நாம் “சகோதரரிடத்தில் அன்புகூரவேண்டும்” என்று அவர்விரும்புகிறார் (1 பேதுரு 2:17).

கொரிந்து நகரில் இருந்த சபை தனது சொந்த வழியில் சென்று, மற்ற எந்த சபைக்குழுமத்தைப் பற்றியும் அக்கறையின்றி தனது சொந்த சட்டங்களை ஏற்படுத்திச் செல்லச் சாய்ந்திருந்தது என்பது உறுதி. எருசலேமில் இருந்த பரிசுத்தவான்களுக்காகப் பணம் சேகரித்தல் என்பது, புறஜாதியாரில் உண்டான சபைகளை ஒன்றுகூட்டிக் கொண்டுவருதலுக்கும் புறஜாதியார் மற்றும் யூதத்துவ சபைக்குழுமங்களுக்கும் இடையில் பந்தங்களை பிணைப்பதற்குமான விருப்ப நோக்கத்தைக் கொண்டிருக்கலாம். எருசலேமுக்கு கொரிந்தியரின் நன்கொடை மற்றும் பிற சபைகளால் அவர்களுக்குக் கூறப்பட்ட வாழ்த்துக்கள் ஆகியவை, அவர்கள் [எருசலேம் சபையார்], தாங்கள் ஒரு மாபெரும் சகோதரத்துவத்தின் அங்கமாக இருந்த உண்மையைப் பற்றிய விழிப்புணர்வை

அவர்களுக்கு ஏற்படுத்தி இருக்க வேண்டும். அந்த சகோதரத்துவத்தின் மீது அன்புகூர வேண்டும் என்று அவர்களைப் பவுல் உற்சாகப்படுத்தினார்.[1]

இன்றைய நாட்களில் சில சபைக்குழுமங்கள், தனிமைத்துவத்தின் முரட்டுத்தனமான வகை ஒன்றை நடைமுறைப் படுத்துவதாக இருக்கலாம். மற்ற சபைக்குழுமங்கள் என்ன செய்கின்றன என்பதைக் குறித்து அவர்கள் ஒன்றும் அறியாமல் அதைப் பற்றிய அக்கறையில்லாமல் இருக்கின்றனர். அவ்வகையான எண்ணப்போக்கை நாம் தவிர்ப்போமாக. மாபெரும் சகோதரத்துவம் ஒன்றின் அங்கமாக நாம் இருப்பதையும், அந்த சகோதரத்துவத்தை அன்புகூரும் பொறுப்பு நமக்கு இருப்பதையும், நாம் நினைவுகூரத் தவறும் அளவுக்கு, நமது சொந்த நடவடிக்கைகளினால் நாம் மூடப்பட்டு விடாதிருப்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்வோமாக. கிறிஸ்துவுக்குள்ளான நமது சகோதரர்கள் மற்றும் சகோதரிகளை அன்புகூருவதற்கு, அவர்களை நாம் அறிந்திருக்க வேண்டும். மற்ற சபைக்குழுமங்கள் என்ன செய்கின்றன என்பது பற்றிய தகவல்களை நாம் அறிந்திருக்க வேண்டும். உலகம் முழுவதிலும் உள்ள நமது சகோதர சபைக்குழுமங்களை ஊக்குவிக்க நம்மால் இயன்ற அளவுக்கு சிறப்பாகச் செயல்பட வேண்டும்.

## "உபகார சிந்தை கொண்டவர்களாக இருங்கள்"

தனிநபர் என்ற வகையிலும் (சபை என்ற வகையில்) ஒன்றிணைந்த வகையிலும் கிறிஸ்தவர்கள் நன்மை செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். நமது சொந்தக் குடும்பத்திலும் நமது சமூகங்களிலும் உதவிசெய்ய வேண்டிய தேவைகளை குறித்து அக்கறை மேற்கொள்ள வேண்டும் என்று நம்மிடத்தில் கர்த்தர் எதிர்பார்க்கிறார். உண்மையில் நாம், "ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத்தக்கதாக, யாவருக்கும் … நன்மைசெய்யக்கடவோம்'' (கலாத்தியர் 6:10) - இதை தனித்தனிக் கிறிஸ்தவர்கள் என்ற வகையிலும் சபை என்ற வகையிலும் நாம் செய்ய வேண்டும்.

நமது சொந்த இடத்தில் இருப்பவர்களின் - சபை உறுப்பினர்கள் அல்லது தேவையில் உள்ள பிறமக்களின் - தேவைகளை நாம் சந்தித்துக் கொண்டிருந்தாலும், புறம்பே கண்ணோக்குதல் மற்றும் பிற நாடுகளில் உள்ள மக்களின் தேவைகளைக் காணுதல் என்ற நமது பொறுப்பில் இருந்து நாம் விடுவிக்கப் பட்டிருப்பதில்லை. கொரிந்து நகரில் இருந்த சபையார், தாங்கள் ஒருக்காலும் நேரில் சந்தித்திராதவர்களும் பல நூற்றுக்கணக்கான மைல்கள் தொலைவில் இருந்தவர்களுமான பரிசுத்தவான்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளப் பட்டனர்.

தொலைதூர நாடுகளில் உள்ள ஆதரவற்றவர்களைப் பற்றி மக்கள் அக்கறை கொள்கின்றனரா? அவர்களுக்கு நிதி ஆதரவு தருவதன் மூலம் அவர்களுக்கு உதவுதல் என்பது சரியானதாகவே உள்ளது. உலகின் பிறபகுதிகளில் பிள்ளைகள் பசியாக இருக்கின்றனரா? அவர்களுக்கு உணவளிக்கவும் அந்த ஊழியத்தில் நாம் உதவும்படி அவர்களுக்கு உதவி அளிப்பதும் சரியானதாகவே உள்ளது. சூறாவளிக் காற்றுகள், பூமியதிர்ச்சிகள், சுனாமிகள் மற்றும் எரிமலைக் குமுறல்கள் போன்ற துன்பங்கள், உயிர்களைச் சிதைத்து, மக்களை இடம்மாற்றி, வீடற்றநிலைக்குக் காரணமாகி, துன்பத்தையும் மரணத்தையும் கொண்டு வந்துள்ளனவா? அந்தத் துன்பங்களை அகற்றுவதற்கு நாம் உதவக்கூடும் என்றால், நாம் அவ்வாறு செய்ய

வேண்டும்! நமது சொந்த அயலகத்தில் யாரும் பசியுடனோ புண்பட்டோ இல்லை என்றாலும், உபகார ஊழியம் செய்வதில் ஈடுபடும் பொறுப்பில் இருந்து நாம் விடுவிக்கப் பட்டிருப்பதில்லை.

## "இழந்து போனவர்களைத் தேடுதல் மற்றும் இரட்சித்தல்"

கொரிந்து நகரில் இருந்த சபை, எருசலேமில் இருந்த ஏழைப் பரிசுத்தவான்களுக்கு உதவக்கூடும்படி பணத்தைச் சேகரிப்பதைப் பவுல் விரும்பியதைக் காட்டிலும் அதிகமாக, கொரிந்து நகரில் இருந்த கிறிஸ்தவர்கள் சுயநலமாக இருப்பதை அவர் விரும்பவில்லை. அவர் எபேசு நகரில் நல்ல வாய்ப்புக்களைக் கொண்டிருந்ததற்காகவும் வேறிடத்தில் பிரசங்கிப்பதில் அப்பெல்லொ தீவிரமாக இருந்ததற்காகவும், அவர்கள் அகம் மகிழும்படி அவர் கேட்டுக்கொண்டார்.

அவ்வாறே, நமது சொந்த இடத்தில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல் என்ற நல்ல வேலையை நாம் செய்துகொண்டிருப்பதாக நம்பினாலும், அதுமாத்திரமே தேவன் நம்மிடத்தில் கேட்கும் விஷயமாக உள்ளது என்று நினைப்பதில் நாம் திருப்தி அடைந்து விடக்கூடாது. நமது குடும்பம் நம் அயலகத்தார் மற்றும் நண்பர்களில் சிலர் இரட்சிப்பு அடையாதிருக்கலாம், மற்றும் விஷயம் இப்படி இருக்கையில் நாம் இயேசுவின் நற்செய்தியைக் கூறுவதில் ஒருக்காலும் இளைப்படையக் கூடாது. மற்றும் உலகம் முழுவதிலும் கூறப்படாத பல லட்சக்கணக்கானோர், சத்தியமின்றி இருளில் உள்ளனர். சுவிசேஷத்தைக் கொண்டு அவர்களை அடைவதற்கான நமது முயற்சிகளில் நாம் ஓய்ந்திருக்கக் கூடாது.

பல சபைக்குழுமங்கள், அண்மையில் உள்ளவர்களுக்கு வசனத்தைப் பிரசங்கிக்கும் பொறுப்பு உள்ளது போன்று செயல்படுகின்றன, ஆனால் "நீங்கள் உலகமெங்கும் போய்" என்ற பொறுப்பை அவர்கள் கொண்டிருப்பதில்லை (மாற்கு 16:15). நாம் அதுபோன்று இருக்கிறோமா?

## தொகுப்புரை: "சபையாரே! புறம்பே கண்ணோக்குங்கள்!"

சபையானது புறம்பே கண்ணோக்கத் தொடங்கினால், விளைவுகள் என்னவாக இருக்கும்? மற்ற இடங்களில் உள்ள மக்கள் உலகரீதியாகவும் ஆவிக்குரிய வகையிலும் ஆசீர்வதிக்கப் படுவார்கள், மற்றும் நாம் நமது பிதாவைப் போன்று ஆகிறோம் என்று அறிவதில் நாம் திருப்தி கொள்வோம். மக்கள் எப்படிக் காணப்பட்டாலும் அல்லது அவர்கள் எங்கு வாழ்ந்தாலும், தேவன் எல்லா மக்களையும் நேசிக்கிறார். மற்ற இடங்களில் உள்ள மக்களுக்கு நாம் அன்பைச் செயல்விளக்கப் படுத்துகையில், நாம் அதிகமாக தேவனைப் போன்றவர்கள் ஆவோம். எல்லா மக்களும் இரட்சிக்கப்பட வேண்டும் என்றே அவர் விரும்புகிறார்.

புறம்பே கண்ணோக்குதலை மேம்படுத்திக் கொள்ளுதல் என்பது சபைக்குழுமத்திற்குள் இருக்கும் பிரச்சனைகளைத் தீர்க்கவும் உதவும். தம்மைப்பற்றி மாத்திரம் அக்கறை கொண்டுள்ள தனிநபர், சந்தோஷம்

இல்லாதவராகவும் ஆரோக்கியம் இல்லாதவராகவும் இருக்கிறார். அதுபோன்றே, தன்னைப் பற்றி மாத்திரம் அக்கறை கொள்ளும் ஒரு சபையானது ஆவிக்குரிய வகையில் வியாதிப்பட்டதாக உள்ளது; அதன் உறுப்பினர்கள் சந்தோஷம் இல்லாதவர்களாகவும் ஆவிக்குரிய வகையில் ஆரோக்கியம் இல்லாதவர்களாகவும் இருக்கச் சாத்தியம் உள்ளது.

இருப்பினும், ஒரு சபையானது தனது கவனக்குவிப்பை, உள்ளான போராட்டங்கள் மீதிருந்து தனது கவனக்குவிப்பை, உலகமுழுவதற்குமான ஊழியங்களுக்கு மாற்றும் என்றால் சபையைப் பிரிப்பதாகக் காணப்படும் அந்தப் பிரச்சனைகள் அவர்களின் உண்மையான கண்ணோக்கில், சார்பளவில் முக்கியமற்றவையாகவும் சுலபமாகத் தீர்க்கப்படக் கூடியவையாகவும் காணப்படும். புறம்பே கண்ணோக்கும் ஒரு சபையானது, அதன் உறுப்பினர்கள் நிறைவான வாழ்வைக் காண்பதிலும் சந்தோஷம் மற்றும் ஆவிக்குரிய ஆரோக்கியம் ஆகியவற்றை அனுபவிப்பதிலும் ஒரு வளரும் சபையாக இருக்க அதிகமான சாத்தியக்கூறு உள்ளது.

---

குறிப்பு

[1]வில்லியம் பார்க்ளே அவர்களின் விளக்கம் ஏற்புடையதாக உள்ளது: “[எருசலேமில் இருந்த ஏழைகளுக்குப் பணம் சேகரித்த] சபையின் ஒருமைப்பாட்டைச் செயல்விளக்கப்படுத்தும் ஒரு வழியாக இருந்தது. சிதறியிருந்த கிறிஸ்தவர்கள். தாங்கள் … சபையின் உறுப்பினர்கள் என்பதையும், சபையின் ஒவ்வொரு உறுப்பினரும், எஞ்சியிருந்தவர்களுக்குக் கடைமைப்பட்டும் பொறுப்பானவர்களாயும் இருந்தனர் என்பதையும் அவர்களுக்குப் போதிக்கும் வழியாக இருந்தது” (William Barclay, *The Letters to the Corinthians,* The Daily Study Bible, 2d ed. [Edinburgh: St. Andrews Press, 1954; reprint, Philadelphia: Westminster Press, 1956], 181).